நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மயிலாடுதுறை
முன்னிலை : திருமதி. M.M.J. உம்முல் பரிதா, B.A., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1,
மயிலாடுதுறை.

2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 13ஆம் நாள்
2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27–ம் நாள் வெள்ளிக்கிழமை

C.N.R.No.TNMY02-003236-2025

**சுருக்கு வழக்கு எண் 520/2025**

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
மயிலாடுதுறை காவல் நிலையம்,
குற்ற எண். 368/2025 ..... குற்றமுறையிடுபவர்

// எதிர் //

1) ராஜ்குமார், வயது 26/2025
த/பெ. செல்லதுரை,
பெரிய தெரு,
அடியாமங்கலம்,
மயிலாடுதுறை.

2) ஐயப்பன், 29/2025
த/பெ. கண்ணையன்,
பெரிய தெரு,
அடியாமங்கலம்,
மயிலாடுதுறை.

3) விஜயகுமார், 45/2025
த/பெ. வீரப்பன்,
பெரிய தெரு,
அடியாமங்கலம்,
மயிலாடுதுறை.

4) கோவிந்தசாமி, 47/2025
த/பெ. குஞ்சு,
காலனி தெரு,
அடியாமங்கலம்,
மயிலாடுதுறை. ..... எதிரிகள்

**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 தேதியிட்ட**
**R.O.C. No.814 /2020/ RG/F1 ன் படி வழக்கின் சுருக்கம்**
**மற்றும் Rule 106 Cr.R.P. ன்படி**
**CASE SUMMARY**

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.27 19:13:40 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| i) | The period of Remand of the Accused | Date of Remand | Date of Surrender | Released on Bail |
| | | | - | A1, A2, A3, A4 - 26.05.2025<br>(Station Bail) |
| ii) | Date of filing of the Complaint/Final report in the Court | Filing of complaint | Filing of Final Report | |
| | | 26.05.2025 | 08.08.2025 | |
| iii) | The date of questioning of the Accused U/s. 263 of the Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 | 10.11.2025 | | |
| iv) | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts except petitions u/s.355 of BNSS. | Crlmp No. | Date of filing | Result |
| | | - | - | - |
| | | - | - | - |
| v) | Date of examination in-chief and cross-examination of a witness | Name of the witness | Date of Chief | Date of Cross |
| | | PW1 | 20.02.2026 | 20.02.2026 |
| | | PW2 | 20.02.2026 | 20.02.2026 |
| | | PW3 | 26.02.2026 | 26.02.2026 |
| | | PW4 | 26.02.2026 | 26.02.2026 |
| | | PW5 | 03.03.2026 | 03.03.2026 |
| | | PW6 | 25.03.2026 | 25.03.2026 |
| | | PW7 | 25.03.2026 | 25.03.2026 |
| vi) | Date of examination of the Accused U/s.351 of BNSS | 26.03.2026 | | |
| vii) | Details of abscondence of an Accused and his appearance/production, as the case may be; and | Nil | | |
| viii) | Grant of stay by superior court and the results there of | Nil | | |

இவ்வழக்கு 08.08.2025ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து 26.03.2026ஆம் தேதி நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து குற்றமுறையிடுபவர் தரப்பில் மயிலாடுதுறை அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 திருமதி P. மாலதி அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M. திருமாள்சுந்தரம் அவர்களும் முன்னிலையாகி இருதரப்பு வாதங்களையும் கேட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்.

UMMUL FARITHA

Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.27 19:13:51 +0530

**// தீர்ப்புரை //**

(i) **<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u> :–**

கடந்த 19.05.2025ம் தேதி இரவு 21.30 மணிக்கு எதிரிகள் நால்வரும் வாதி முருகேசன் என்பவரது வீட்டின் வாசல் முன்பாக அருவாள் மற்றும் கட்டைகளை வைத்துக்கொண்டு நின்று கொண்டு வாதியை பார்த்து குச்சிக்காரி மவனே, தேவடியா மவனே உன் புள்ளைய வரச்சொல்லுடா அவன இன்னைக்கு கொல்லாம போக மாட்டோம் அவன் இப்ப வரவில்லை என்றால் குமரேசன் ஊருக்குள்ள வரமுடியாது அவன வரச்சொல்லு அவன பொளக்காம இங்கிருந்து போக மாட்டோம் என்று மிரட்டிய குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே 1 முதல் 4 வரையிலான எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 296(b), 351(2) BNSன் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டு வழக்கிற்கு அடிப்படையான ஆதாரங்கள் இருப்பதால் இவ்வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டது. பின்னர் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் அழைப்பாணையின் பேரில் முன்னிலையானவுடன் அவர்களுக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 230 BNSS இலவசமாக வழங்கப்பட்டது. படித்து பார்க்க போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டது.

3) பின்னர், 1 முதல் 4 வரையிலான எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 296(b), 351(2) BNS கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றம் பற்றி வினவியபோதும், எதிரிகளுக்கு எதிராக குற்றத்தின் சாராம்சம் குறித்து படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோதும் எதிரிகள் அவற்றை மறுத்து குற்றவாளி இல்லை என்றும், எதிர்த்து வழக்காட விரும்புவதாகவும் கூறினார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4) இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>(ii) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்</u> :–**

5) கடந்த 19.05.2025ம் தேதி இரவு 21.30 மணிக்கு எதிரிகள் நால்வரும் அ.சா.1ன் வீட்டு வாசல் முன்பாக அருவாள் மற்றும் கட்டைகளை வைத்துக்கொண்டு நின்று கொண்டு அ.சா.1ஐ பார்த்து குச்சிக்காரி மவனே, தேவடியா மவனே உன் புள்ளைய வரச்சொல்லுடா அவன இன்னைக்கு கொல்லாம போக மாட்டோம் அவன் இப்ப வரவில்லை என்றால் குமரேசன் ஊருக்குள்ள வரமுடியாது அவன வரச்சொல்லு அவன பொளக்காம இங்கிருந்து போக மாட்டோம் என்று மிரட்டிய குற்றம் புரிந்துள்ளதாக எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

UMMUL FARITHA Digitally signed by UMMUL FARITHA Date: 2026.03.27 19:13:56 +0530

6) கடந்த 20.05.2025ம் தேதியன்று காலை 07.00 மணிக்கு **அ.சா.6** முருகன் சிறப்பு உதவி ஆய்வாளர் மயிலாடுதுறை காவல் நிலைய பணியில் இருந்த போது முருகேசன் த/பெ. சின்னதம்பி பெரியதெரு, அடியாமங்களம் மயிலாடுதுறை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் நிலைய மனு ரசீது எண்.657/2025 பதிவு செய்து விசாரணைக்கு பின்பு 26.05.2025ம் தேதியன்று மயிலாடுதுறை காவல் நிலைய குற்ற எண். 368/2025, ச/பி. 296(b), 351(ii) BNS கீழ் முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** பதிவு செய்து, பின்னர் வழக்கு கோப்புகளை மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் பிரியங்கா வசம் ஒப்படைத்துள்ளார்.

7) பின்னர், அ.சா.7 பிரியங்கா உதவி ஆய்வாளர் இவ்வழக்கு கோப்புகளை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே மதியம் 03.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் ஆனந்த், உத்திராபதி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் **அ.சா.ஆ.3** மற்றும் மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** தயார் செய்து, அன்றைய தினமே சம்பவ இட சாட்சிகளான முருகேசன், அன்பரசன், மணிமாறன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, இவ்வழக்கில் எதிரிகளை 26.05.2025ம் தேதி மாலை 06.00 மணிக்கு காந்திஜி ரோடு, டி.எல்.சி பள்ளிக்கூடம் அருகில் நின்று கொண்டிருந்தவர்களை கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து தக்க பிணையதாரர்கள் மூலமாக பிணையில் விடுவித்து, 03.06.2025ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் முருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் புலன் விசாரணையை முடித்து 03.06.2025ம் தேதி எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 296(b), 351(2) BNSன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) புகார்தாரர் அ.சா.1 திரு. முருகேசன் சம்பவம் பற்றியும், புகார் கொடுத்தது பற்றியும் சாட்சியமளித்துள்ளார். பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.2 திரு. ஆனந்த், அ.சா.5 திரு. உத்திராபதி மற்றும் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.3 திரு. மணிமாறன், அ.சா.4 திரு. அன்பரசன் ஆகியோர் அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் பிறழ் சாட்சிகளாக மாறி சாட்சியமளித்துள்ளார்கள். முதல் விசாரணை அதிகாரியான அ.சா.6 திரு. முருகன் சிறப்பு உதவி ஆய்வாளர் புகார் பெற்று, வழக்கு பதிவு செய்தது பற்றி சாட்சியமளித்துள்ளார். புலன் விசாரணை அதிகாரியான அ.சா.7 திருமதி. பிரியங்கா உதவி ஆய்வாளர் இவ்வழக்கின் புலன் விசாரணை குறித்தும், எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியமளித்துள்ளார்.

9) இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் 25.03.2026 அன்று முடித்து கொள்ளப்பட்டுள்ளது. அரசு தரப்பில் பட்டியல் சாட்சிகள் 7 குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.27 19:14:02 +0530

10) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியத்தில், எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சாட்சிய விவரங்களை தொகுத்து எதிரிகளிடம் பிரிவு 351(1)(ஆ) BNSS–ன் படி வினவியபோது எதிரி பொய் சாட்சியம், பொய் வழக்கு என்றும், தங்களது தரப்பு சாட்சியம் இல்லை என்று கூறி எதிரிகள் தரப்பு சாட்சியம் 26.03.2026 அன்று முடிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

11) அரசு தரப்பானது புகார்தாரரான அ.சா.1 சம்பவத்தை பற்றி முன்னுக்கு பின் முரணாக சாட்சியமளித்துள்ளார் என்றும், பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.2, அ.சா.5 மற்றும் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.3, அ.சா.4 ஆகியோர் பிறழ் சாட்சிகளாக மாறிவிட்டபோதிலும், அ.சா.6 மற்றும் அ.சா.7ன் சாட்சியின் மூலமாக புலன் விசாரணையானது வழக்கு சங்கதியுடன் கோர்வையாக இருப்பதாலும், புலன் விசாரணை முறையாக செய்து ஆவணங்கள் மூலமாக எதிரிகள் செய்த குற்றத்தை அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு அரசு தரப்பால் வாதிடப்பட்டது.

12) மாறாக எதிரிகள் தரப்போ, இவ்வழக்கின் புகார்தாரர் சம்பவத்தை பற்றி முன்னுக்கு பின் முரணாக சாட்சியமளித்துள்ளார் என்றும், பார்வை மகசர் சாட்சி மற்றும் கண்ணுற்ற சாட்சிகள் ஆகியோர் பிறழ் சாட்சிகளாக மாறிவிட்டதால், அரசு தரப்பு எதிரிகளின் மீதுள்ள குற்றத்தை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி இவ்வழக்கிலிருந்து எதிரிகளை விடுதலை செய்யுமாறு வாதிடப்பட்டது.

**<u>(iii) தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

13) இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில் இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களான ச/பி. 296(b), 351(2) BNSன் கீழ் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>iv) தீர்வு:</u>**

14) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கின் சம்பவம் 19.05.2025ந் தேதி இரவு சுமார் 09.30 மணியளவில் மயிலாடுதுறை அடியாமங்கலம் அ.சா.1ன் வீட்டின் முன்பு ரோட்டில் அமைந்துள்ளது. அமைந்துள்ளது. பின்னர் அ.சா.1னிடம் புகார் மனு பெற்று, காவல் நிலைய மனு எண்.657/2025, 20.05.2025ம் தேதி பதிவு செய்து, விசாரணைக்கு பின்னர் 26.05.2025ம் தேதி மதியம் 13.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, 07.08.2025ஆம் தேதி காலை 10.30 மணிக்கு இத்திறந்த நீதிமன்றத்திற்கு வரப்பெற்றுள்ளது. இவ்வழக்கில் காலதாமதம் குறித்து முதல் தகவல் அறிக்கையில் எவ்வித விளக்கமும் முன்வைக்கப்படவில்லை.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.27 19:14:09 +0530

15) இவ்வழக்கின் புகார்தாரர் **அ.சா.1**ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், கடந்த ஆண்டு சித்திரை மாதத்தில் ஒரு நாள் இரவு 10.00 மணியளவில் தானும், தனது மனைவியும் டிவி பார்த்துக் கொண்டிருந்தபோது வாசலில் சத்தம் கேட்டது, வாசலுக்கு வந்து பார்த்த போது ஆஜர் எதிரிகள் நால்வரும் தன்னை அடிக்க வந்தார்கள், தன்னுடன் தன் மனைவியும் வாசலுக்கு வந்து விட்டார், தான் ஒன்றும் செய்யவில்லை, தன்னை ஏன் அடிக்க வருகிறீர்கள் என்று எதிரிகளிடம் கேட்டேன், ஆஜர் எதிரிகளிடம் ஒரு பையன் பொண்ணு சம்பந்தமாக தனது மகன் சொல்லிகொடுத்துவிட்டதால் தான் பிரச்சனையானது என்று சொல்லி ஆஜர் எதிரிகள் தனது வீட்டிற்கு வந்து தனது மகன் சொல்லிக்கொடுத்து தான் பிரச்சனை ஏற்பட்டது, உன் மகன் எப்படி சொல்லலாம், தன்னை குச்சிக்காரி தேவடியா மகனே என்று தன்னை திட்டி, அடிக்க வந்தார்கள், தனது மனைவி தனது கணவர் என்ன செய்தார் அவரை ஏன் அடிக்கவறீங்க என்று கேட்டதற்கு அவரையும் அடிக்க போனார்கள், ஊர்காரர்கள் அனைவரும் சத்தத்தை கேட்டு சம்பவ இடத்திற்கு வந்து விட்டார்கள், ஊர்காரர்கள் மேற்படி பிரச்சனையை சமாதானம் செய்தார்கள், மேற்படி சம்பவம் குறித்தான புகார் மனு **அ.சா.ஆ.1** மயிலாடுதுறை காவல் நிலையம் சென்று தானும், தனது மனைவியும் கொடுத்தோம், புகார் மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

16) பார்வை மகசர் சாட்சிகளான **அ.சா.2** மற்றும் **அ.சா.5** தங்களது சாட்சியத்தில், சம்பவம் பற்றி எதுவும் தெரியாது, பார்வை மகசரில் உள்ள கையெழுத்துக்களில் தன்னுடையது எதுவும் இல்லை என்று அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் பிறழ் சாட்சிகளாக மாறி சாட்சியமளித்துள்ளார்கள். கண்ணுற்ற சாட்சியான **அ.சா.3** தனது சாட்சியத்தில், சம்பவம் நடந்த சமயத்தில் வெளியூரில் வசித்து வந்தேன், கடந்த ஐந்து ஆண்டுகளாக ஊரில் வசிக்கவில்லை, சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார். கண்ணுற்ற சாட்சியான **அ.சா.4** தனது சாட்சியத்தில், சம்பவம் நடந்த சமயத்தில் தனது வீட்டில் இருந்தேன், சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார். புலன் விசாரணை அதிகாரியான **அ.சா.7**ன் சாட்சியம், இவ்வழக்கின் புலன் விசாரணை குறித்தும், எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது குறித்தும் அமைந்துள்ளது.

17) மேற்படி அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகள் தன்னையும், தனது மனைவியையும் கெட்ட வார்த்தைகளால் திட்டி, அடிக்க வந்ததாகவும், சம்பவத்தை சத்தம் கேட்டு ஊர்காரர்கள் வந்து சமாதானம் செய்து வைத்ததாகவும், அந்த சம்பவம் தொடர்பாக மறுநாள் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். ஆனால், சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக சாட்சிகள் பட்டியலில் குறிப்பிட்டுள்ள அ.சா.3 மற்றும் அ.சா.4 தங்களது சாட்சியத்தில், சம்பவம் நடந்த போது வெளி ஊரில் வசித்து வந்ததாகவும், வீட்டில் இருந்ததாகவும், சம்பவம் பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும்

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.27 19:14:15 +0530

சாட்சியமளித்துள்ளார்கள். மேலும், அ.சா.1ன் மனைவி சம்பவத்தின் போது உடனிருந்ததாகவும், அவரையும் எதிரிகள் அடிக்கபோனதாகவும் அ.சா.1 சாட்சியமளித்துள்ள நிலையில் அவரை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்காதது சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, அ.சா.1ன் சாட்சியத்தை அனுசரிக்கும் வகையில் எதிரிகள் தான் சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று அ.சா.2 முதல் அ.சா.5 வரையிலானவர்கள் குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. எனவே, எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்கும் வகையில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை என்பது தெளிவாகிறது. அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலானவர்கள் எதிரிகள் தான் சம்பவத்தில் ஈடுபட்டதாக நம்பும்படியாகவும், கோர்வையாகவும் சாட்சியமளிக்காதது அரசு தரப்பு வழக்கில் சந்தேகத்தை எழுப்பும் வகையில் அமைந்துள்ளது.

18) புகார்தாரரான அ.சா.1 போலிசார் விசாரணை மற்றும் புகாரில் சொல்லியுள்ள சம்பவத்திற்கு முரணாக நீதிமன்றத்தில் தெளிவின்றி சாட்சியமளித்துள்ளார். பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.2, அ.சா.5, கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.3, அ.சா.4 ஆகியோர் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ள நிலையில், அ.சா.1, அ.சா.6 மற்றும் அ.சா.7ன் சாட்சியத்தினை மட்டும் அடிப்படையாக கொண்டு அரசு தரப்பு வழக்கினை எதிரிகளுக்கு எதிராக முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டிற்கு அரசு தரப்பில் உறுதியூட்டும் வகையில் எவ்வித சாட்சியமும் அரசு தரப்பில் இல்லாத நிலையில் தனித்து இயங்குகிற உறுதியூட்டம் இல்லாத காவல்துறை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் கொண்டு எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுவிட்டதாக தீர்மானிக்க இயலாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19) எனவே, மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்து பார்க்கும்போது இவ்வழக்கின் சம்பவத்தை பற்றி சாட்சிகள் யாரும் அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியமளிக்காத நிலையில் சம்பவ சமயத்தில் எதிரிகள் தான் அ.சா.1ஐ திட்டி, கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாக நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிக்கப்படவேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20) இறுதியாக, 1 முதல் 5 வரையிலான எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 296(b), 351(2) BNSன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் எதிரிகள் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து எதிரிகளை பிரிவு 271(1) BNSSன் கீழ் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

UMMUL FARITHA

Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.27 19:14:20 +0530

21) எதிரிகளால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப்பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

22) அரசு தரப்பால் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதுகுறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27–ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.27 19:14:25 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை.

<u>அட்டவணை</u>

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>

அ.சா.1 – திரு. முருகேசன் (புகார்தாரர்)

அ.சா.2 – திரு. ஆனந்த்

அ.சா.3 – திரு. மணிமாறன்

அ.சா.4 – திரு. அன்பரசன்

அ.சா.5 – திரு. உத்திராபதி

அ.சா.6 – திரு. முருகன், சிறப்பு உதவி ஆய்வாளர்

அ.சா.7 – திருமதி. பிரியங்கா, உதவி ஆய்வாளர்

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 20.05.2025 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 26.05.2025 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 26.05.2025 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.4 | 26.05.2025 | மாதிரி வரைபடம் |

<u>அரசு தரப்பு சான்று பொருள் :</u> இல்லை

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள் :</u> இல்லை

<u>குறிப்பு</u>

1. எதிரிகள் விசாரணையின் போது பிணையில் இருந்தார்கள்.
2. வழக்கின் முடிவு குறித்து காவல் துறைக்கு அறிவிக்கப்பட்டது.
3. சாட்சிகள் விசாரணையின் போது 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

UMMUL FARITHA

Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.27 19:14:32 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை.